**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 481/2022 |
| Name | : Chinnadurai |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.11.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் போளரப்பட்டியில் வசித்து வருகிறேன். அட்டை மில்லில் வேலை செய்கிறேன். கடந்த 06.06.2022 ம் தேதி இரவு 10.40 மணியளவில் மைவாடி பிரிவில் நான் நின்று கொண்டிருந்தேன். இந்த வழக்கில் காயம் பட்ட கிருஷ்ணனை எனக்கு தெரியும். அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். மேற்படி கிருஷ்ணன் TVS XL இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து வலது பக்கம் திரும்பிய போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த கார் மோதி கிருஷ்ணனுக்கு விபத்து ஏற்பட்டது. நான் அவரது மகனுக்கு போன் செய்து சொன்னேன். அவர் எனது நண்பர் ஆவார். கிருஷ்ணனை ஆம்புலன்ஸ் மூலம் கோகுல் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை 8 ம் தேதி விசாரணை செய்தார்கள். விபத்தை ஏற்படுத்திய நபர் ஆஜர் எதிரி தான். அவர் ஒட்டன் சத்திரத்தைச் சேர்ந்த கருணாகரன் ஆவார்.

அவரிடன் நான் பேசினேன். அவரை எனக்கு தெரியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) கிருஷ்ணன் மற்றும் கார்த்திகேயன் எனது உறவினர்கள் அல்ல ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் சற்று தள்ளி உள்ளார்கள். மைவாடியில் உள்ள அட்டை மில் எனக்கு சொந்தமானது ஆகும். சம்பவத் தினத்தன்று எனது சொந்த வேலையாக மைவாடி அருகே நின்று கொண்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்ன வேலை என்றால் புஷ்பத்துரில் காளியம்மன் கோவில் திருவிழாவிற்கு மாலை 06.00 மணிக்கு எனது காரில் நான் மட்டும் போய்விட்டு 10.30 மணிக்கு வந்து நின்று கொண்டிருந்தேன். உடுமலை – பழனி ரோடு வாகனப் போக்குவரத்து நிறைந்த ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது இருட்டாக இருந்தது என்றால் இருட்டாக இருந்தது ஒரு லைட் எரிந்துகொண்டிருந்தது. வாகனம் டம் என்று மோதிய சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இருட்டான நேரம் வாகனத்தின் முகப்பு விளக்கின் வெளிச்சம் மட்டும் தான் தெரியும் என்றால் வண்டி வாகனங்கள் சென்று வந்து கொண்டிருந்ததால் நன்கு வெளிச்சம் இருந்தது. நான் ரோட்டின் மைவாடி பிரிவு ரோட்டில் நின்று கொண்டிருந்தேன். விபத்தில் அடிப்பட்டவரை நான் தான் தனியார் ஆம்புலன்சை வரச் சொல்லி அனுப்பி வைத்தேன். போலீசார் சம்பவ இடத்திற்கு சம்பவ நாளான்று சுமார் இரவு 11.00 மணிக்கு வந்தார்கள். கிருஷ்ணன் எனது ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு வாகன விபத்து நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் இருட்டான நேரம் என்பதால் யாருடைய கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. யார் வேகமாக வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. ஆனால் கார் அடித்து இழுத்துக்கொண்டு சென்றது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.14 08:47:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்